JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | **774/2018** |
| Deposition of witness for | **P.W. 1** | Prosecution /Defence / Court | |
| Name | செல்வராஜ் | Village | MC ரோடு, பெருந்துறை |
| Father's Name | பழனிச்சாமி | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 28.07.2026.**

<u>**முதல் விசாரணை**</u>

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு சம்பவ சமயத்தில் லாரி வாங்கி விற்கும் தொழில் செய்து வந்தேன். தற்போது ஹாலோ பிரிக்ஸ் பிஸினஸ் செய்து வருகிறேன். 22.01.2018 ம் தேதி மதியம் 2.00 மணியளவில் பெருந்துறை டீக்கடையில் நானும், என்னுடைய நண்பர் முத்துவும் அண்ணாசிலைக்கு எதிரில் உள்ள அரோமா டீக்கடையில் டீ குடித்துக் கொண்டிருந்தோம். அப்போது ஆஜரில் உள்ள எதிரி நந்தகுமார் ஏன்டா தாயோலி முதலாளிக்கு வேவு பார்க்க வந்தாயா என்று கேட்டு தகாத வார்த்தையால் திட்டினார். என்னை அடித்து உதைத்து கொன்று விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார். 24.02.2018 ம் தேதி சுமார் 5.00 – 6.00 மணியளவில் கொங்கு பள்ளிக்கூடத்திற்கு எதிரில் உள்ள ரம்யா ஹோட்டலில் நான் நின்று கொண்டிருந்த போது ஆஜரில் உள்ள எதிரி நந்தகுமார் வந்து போலீசில் புகார் கொடுப்பதாக சொன்னியே புகார் கொடுத்தாய் அல்லவா போலீஸ் என்ன புடுங்கி

விட்டதா என்று தகாத வார்த்தையால் திட்டினார். ஆஜரில் உள்ள எதிரி நந்தகுமார் நீ பிழைக்க வந்தவன் என்னை என்ன செய்து விடுவாய் என்று கேட்டார். நான் மறுநாள் 25.02.2018 ம் தேதி பெருந்துறை காவல் நிலையத்திற்கு சென்று மதியம் 1 – 2.00 மணி இருக்கும் நந்தகுமார் மீது நடவடிக்கை எடுக்குமாறு எழுத்து மூலமான புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகாரைப் பெற்று வழக்கு பதிவு செய்த பெருந்துறை போலீசார் என்னை 25.02.2018 ம் தேதி பெருந்துறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் விசாரிக்க நடந்த விவரங்களை கூறினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.Com வரை படித்துள்ளேன். கதவு எண். 148 MC ரோடு, பெருந்துறை என்ற முகவரி என்னுடைய சொந்த வீடா என்றால் ஆமாம். மேற்படி முகவரி எங்கு உள்ளது என்றால் மாரியம்மன் கோவில் பக்கம் பெருந்துறை புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ளது. எதிரி இரண்டு முறை மக்கள் நீதி மையம் கட்சியில் எம்.எல். ஏ ஆக தேர்தலில் நின்றுள்ளார் என்றால் சரிதான் அதனால் அவர் பிரபலமானவர் என்றால் சரிதான். 2018 காலகட்டத்தில் அடிக்கடி அவருடைய பெயரையும், போட்டோவையும் செய்தித்தாள்களில் போடுவார்கள் என்றால் சரிதான். எதற்காக செய்தித்தாளில் வரும் என்றால் தொழில் நடந்து வரும் இடங்களுக்கு சென்று பணம் கேட்டு மிரட்டியதாக செய்தித்தாளில் வரும். நான் வழக்குக்காக பொய்யாக பணம் கேட்டு மிரட்டியதாக செய்தித்தாளில் வரும் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. மேற்படி முகவரியில் நான் 48 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். அ.சா.ஆ.1 புகாரில் என் முதலாளி வேவு பாக்க சொல்லி உள்ளதாக சொல்லி உள்ளேன் என்னுடைய முதலாளியின் பெயர் சின்ன கண்ணு என்கிற சேனாதிபதியாகும். சின்னகண்ணு என்கிற சேனாதிபதி லாரி டிரைவராக இருந்தார் என்றால் சரியல்ல. என்னுடைய முதலாளி நிறுவனத்தின் பெயர் அம்மன் ரோடு வேஸ் ஆகும். அம்மன் ரோடு வேசில் என்ன பணி நடக்கும் என்றால் கல் மண் லாரி மூலம் ஏற்றி சென்று விற்பனை செய்வார்கள்.கல், மண் எங்கிருந்து கொண்டு வந்து விற்பனை செய்வார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அவரிடம் நான் என்ன வேலை செய்தேன்

என்றால் லோடு ஆர்டர் எடுப்பேன். அவருடைய வண்டியையும் பார்த்துக் கொள்வேன். சேனாதிபதி எத்தனை வண்டி வைத்திருந்தார் என்றால் சுமார் ஐந்து டிப்பர் லாரி வண்டி வைத்திருந்தார்.

3. 2018 ம் ஆண்டில் சேனாதிபதியுடன் யார் யார் கூட்டாக வேலை செய்து வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எந்த ஆண்டிலிருந்து எந்த ஆண்டு வரை சேனாதிபதியிடம் நான் வேலை செய்தேன் என்றால் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை செய்தேன். முத்து என்பவருக்கு என்ன தொழில் என்றால் லாரிக்கு பாடி பில்டர் ஆவார். அவர் என்ன பெயரில் லாரி வைத்துள்ளார் என்றால் அவர் கூலிக்கு சென்று வருவார். முத்து யாரிடம் வேலைக்கு செல்வார் என்றால் கிடைத்த இடத்தில் வேலைக்கு செல்வார். முத்துவும் நானும் ஒரே ஏரியாவை சேர்ந்தவர்கள் ஆவோம். முத்து எத்தனை வருடமாக எனக்கு பழக்கம் என்றால் சுமார் 20 வருடமாக பழக்கம். ரமேஷ் என்ன தொழில் செய்து வந்தார் என்றால் ஏர்செல் டீலராக இருந்து வந்தார். ரமேஷ் எனக்கு நண்பர் என்றால் சரிதான்.

4. சந்தோஷ்குமார் எனக்கு பழக்கமா என்றால் இல்லை. சின்ன கண்ணு என்பவர் எனக்கு நண்பர் ஆவார். புகார் கொடுக்கும் பொழுது மேற்படி நபர்கள் அனைவரும் ஒன்றாக சென்று தான் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். எங்கள் அனைவரின் பெயர், அப்பாவின் பெயர், விலாசம் ஆகியவற்றை போலீசார் கேட்டு எழுதிக் கொண்டார்கள் என்றால் சரிதான். போலீசார் பெயர் விலாசம் எழுதிய பேப்பரில் எங்கள் அனைவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல என்னிடம் மட்டும் வாங்கினார்கள். புகார் கொடுத்த பின்னிட்டு போலீசார் என்னை அழைத்தார்களா என்றால் இல்லை. நான் யாரிடம் புகார் கொடுத்தேன் என்றால் சிறப்பு உதவி ஆய்வாளரிடம் புகார் கொடுத்தேன். அ.சா.ஆ.1 புகார் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் காவல் நிலையத்தில் வைத்து எழுதப்பட்டது. அ.சா.ஆ.1 புகாரில் உள்ள கையொப்பமும், முதல் தகவல் அறிக்கையில் உள்ள கையொப்பமும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரியல்ல என்னுடையது தான்.

5. சம்பவம் நடந்த இடத்தில் கூட்டமாக இருந்ததா என்றால் ஆமாம். யார் இருந்தார்கள் என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். கூட்டமாக இருந்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 22.01.2018 ம் தேதி ஒரு சம்பவம் நடந்ததாக சொல்லி உள்ளேன் அது சம்பந்தமாக ஒரு புகார் காவல் நிலையத்தில் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் போலீசார் விசாரணையிலும் புகாரியிலும் ரம்யா மெஸ் அருகில் நின்று கொண்டு இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. 22.01.2018 ம் தேதி நடந்த சம்பவம் சம்பந்தமாக என்னையோ ,எதிரியையோ போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். 24.02.2018 ம் தேதி நடந்த சம்பவம் தொடர்பாக எதிரியை அழைத்து விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். பல்கி மணி என்பவர் மண் வாங்கி விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

6. தோப்பு வெங்கடாச்சலம் என்பவரை எனக்கு தெரியும் என்றால் சரிதான். 2018 ம் ஆண்டில் அமைச்சராக இருந்தார் என்றால் சரிதான். URC ராசு என்பவரை எனக்கு தெரியும். பல்கி மணி என்பவரை எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரி கனிமவள கொள்ளை சம்பந்தமாக கோட்டாட்ச்சியரிடம் ஒரு புகார் அளித்து விசாரணைக்கு சென்று வந்தார் என்றால் விசாரணைக்கு சென்று வந்தது மட்டும் எனக்கு தெரியும் யார் புகார் கொடுத்தார்கள் எதற்காக சென்று வந்தார் என்பது எனக்கு தெரியாது. 23.02.2018 ம் தேதி ஈரோடு வருவாய் கோட்ட அலுவலர் எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் சேனாதிபதிக்கு ரூ 4 கோடியே 22 லட்சத்து 46 ஆயிரத்து 360 அபராதமாக விதித்திருந்தார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

7. சேனாதிபதியின் நண்பர் T.C சுப்பிரமணிக்கும், சேனாதிபதிக்கும் சேர்த்து ரூ. 7 கோடியே 99 லட்சத்து 73 ஆயிரத்து 100 ரூபாய் அபராதம் விதித்திருந்தார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. மேற்படி புகாரை எதிரி வாபஸ் பெற வேண்டும் என்பதற்காகவும், செய்தித்தாளில் மேற்படி விவரம் வரக் கூடாது என்பதற்காக என் மூலமாக 24.02.2018 ம் தேதி பொய் புகார்கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி கனிமவள கொள்ளை சம்பந்தமாக விசாரணைக்கு ஆஜராகக் கூடாது என்பதற்காகவும், எதிரி சிறையில் அடைக்கப்பட்டு விட்டால் நாங்கள் நினைத்ததை சாதித்துக் கொள்ளலாம் என்று பொய் வழக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. சேனாதிபதி

என்கிற சின்னகண்ணு, T.C சுப்பிரமணியம் என்கிற பல்கி மணி, தோப்பு N.D. வெங்கடாச்சலம், URC ராசு என்கிற சந்திரசேகரன் எதிரியை தூக்கி சென்று கை மற்றும் கால்களை உடைத்தது சம்பந்தமாக CBI யில் புகார் கொடுக்கப்பட்டு விசாரணை நடந்து வந்தது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

8. சேனாதிபதி என்கிற சின்னகண்ணு நிபந்தனை கையெழுத்து செய்து வந்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. T.C சுப்பிரமணியம் என்கிற பல்கி மணி, தோப்பு N.D. வெங்கடாச்சலம், URC ராசு என்கிற சந்திரசேகரன் ஆகியோர்களால் உயிருக்கு பாதிப்பு உள்ளது என்று போலீஸ் பாதுகாப்பு வாங்கி போலீஸ் பாதுகாப்புடன் இருந்து வந்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. சேனாதிபதி என்கிற சின்னகண்ணு, T.C சுப்பிரமணியம் என்கிற பல்கி மணி இருவரும் தோப்பு வெங்கடாசலம் அவர்களிடம் டிரைவராக பணிபுரிந்தவர்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. தோப்பு வெங்கடாசலம் அமைச்சராக இருந்ததால் நடைபெறாத சம்பவத்தை கொடுத்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது பொய் என்பதால் தான் சம்பவ இடத்தில் இருந்த கடைகள் மற்றும் வீட்டில் இருந்தவர்களை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

9. என்னுடைய உரிமையாளர் சேனாதிபதி என்கிற சின்னகண்ணு இந்த வழக்கில் சாட்சியாக இல்லை என்றால் சரிதான். நான் குடியிருப்பது புதிய பேருந்து நிறுத்தம் அருகில் என்பதால் சம்பவ இடத்திற்கு நான் செல்வதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் இந்த வழக்குக்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி மீது ஒரு வழக்கு போட வேண்டும் என்பதற்காக மேற்படி நபர்கள் என்னை வைத்து புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் பொய் புகார் கொடுத்துள்ளதால் எதிரிக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை